بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/07/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மாநபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர், சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பரிவு மற்றும் வள்ளண்மை ஆகிய பண்புகள்: ஈமானை உறுதிப்படுத்தும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பரிவு மற்றும் வள்ளல் தன்மையின் சில நிகழ்வுகளை எடுத்து வைப்பேன்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: அன்னாரது கொடை எல்லையற்ற பேராறாக இருந்தது. அன்னாரது கை முத்தைப் பொழியும் மேகமாக இருந்தது. அது பொழிந்துக் கொண்டே இருந்தது; தாகம் தீர்த்துக் கொண்டே இருந்தது. இந்தத் தொடர் நிகழ்வு ரமலான் மாதத்தில் மிகவும் பெருகி விடும்.

காஷ்மீரின் அப்துல் கஃப்பார் சாஹிப் அறிவிக்கிறார்கள். இவருக்குத் திருமணம் ஆன போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டு விலையுயர்ந்த நகைகளை இவருக்கு வழங்கி விட்டார்கள். இது ஹுஸூர் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து நியமிக்கப்படுவதற்கு முன்பு நிகழ்ந்ததாகும். அப்பொழுது அன்னார் தனிமையில் வாழ்ந்து வந்தார்கள்.

பஷீர் ப(ஹ்)ட்டி சாஹிப் அவர்களின் தாயார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் திருமண வேளையில், இசைக்குலப் பெண் ஒருத்தி பறையைக் கொண்டு வந்து, வாசிக்கத் தொடங்கிவிட்டாள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், “இதை இசைக்க வேண்டாம் என்று அவளிடம் சொல்லுங்கள். அவள் என்ன கேட்கிறாளோ அதை அவளுக்குக் கொடுத்து விடுங்கள்” என்று கூறினார்கள். இதன்படி, அவளுக்கு 4 5 ரூபாய் கொடுக்கப்பட்டது. பிறகு அவள், ‘எனக்குக் குளிர் அடிக்கிறது’ என்றாள். இதனால் ஹுஸூர் (அலை) அவர்கள் அவளுக்கு ஒரு ரஸாயீ - கடும்குளிருக்கான போர்வையும் வாங்கிக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எல்லாவற்றிற்கும் முதலாக இந்தக் கருத்தை உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, அன்னாருக்கு எந்த விதமான சிறப்பான ஆடை

அணிவதற்கும் ஆர்வம் இருக்கவில்லை. வாழ்நாளின் இறுதியில் சில ஆண்டுகளில் அன்னாரிடம் உடைகள் நிறைய வந்தன. குறிப்பாக, Coat போன்றவை. தலைப்பாகையைப் பெரும்பாலும் அன்னார் தாமே விலை கொடுத்து வாங்கி அணிவார்கள். உடைகள் ஆயத்தமாக ஆயத்தமாக உடனுக்குடன் செலவாகியும் விடும் (அதாவது, நினைவுப் பொருளாகக் கேட்கக்கூடியவர்களுக்கு அன்னார் வழங்கி விடுவார்கள்).

ஹஸ்ரத் மீர் மஹ்தீ ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை மவ்லவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் அவர்கள் என்னிடம், 'சஷ்மே மஸீஹீ - கிறித்தவர்களின் நீரூற்று' எனும் நூலின் ஒரு பிரதியைக் கேட்டார்கள். அதற்கு நான், 'இவ்வளவு பிரதிகள் அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனென்றால், சில நேரம் அரசாங்கம் கேட்டு விடும். இப்பொழுது கூடுதலாக எந்தப் பிரதியும் இல்லை. நீங்கள் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு எழுதி கேட்டுக் கொள்ளலாம்' என்று பதில் அளித்தேன். அவர்கள் எழுதியதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஒரு பிரதியை அவர்களுக்கு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கஸ்தூரி நறுமணம் இருக்கும். ஒருமுறை, 'ஹுஸூர், எனக்கு கஸ்தூரி வேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன். இதனால் ஹுஸூர் (அலை) அவர்கள், "இதிலிருந்து எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு சிமிழை என் முன் நீட்டி விட்டார்கள். நான் அதிலிருந்து சிறிதளவு எடுக்க, ஹுஸூர் (அலை) அவர்கள் புன்சிரித்தவாறு, "இதுவோ ஒன்றுமே இல்லை" என்று கூறி, ஒரு தோலா ஒன்றரை தோலா (ஏறத்தாழ 18 கிராம்) அளவு கஸ்தூரியைத் தாமே எனக்கு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் உள்ளத்தில் தம் தோழர்களுக்காக எவ்வளவு வேதனை இருந்தது என்பது குறித்து ஒரு நிகழ்வு இவ்வாறு கிடைக்கிறது:- ஹஸ்ரத் ஹகீம் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்: என் மனைவிக்குக் குழந்தை பிறந்தது. அதற்கு ஏழாவது நாள் மக்ரிபுக்கு அருகில் அவளுக்கு வலிப்பு நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படத் தொடங்கி விட்டன. நான் மக்ரிபுக்குப் பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஓடிச் சென்றேன். ஹுஸூர் (அலை) அவர்கள், "இதுவோ மிகக் கொடிய நோயின் தொடக்க அறிகுறியாகும். நீங்கள் உடனடியாக உங்கள் மனைவிக்குப் பெருங்காயத்தைக் கொடுங்கள். பிறகு, "ஒன்று ஒன்றரை மணி நேரம் கழித்து எனக்குத் தகவல் தெரிவியுங்கள்" என்று கூறினார்கள். நான் இஷாவுக்குப் பிறகு மீண்டும் சென்றேன். மேலும், 'நோய் அதிகமாகி விட்டது' என்று பணிவுடன் கூறினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் பல்வேறு மருந்துகளைப் பரிந்துரைத்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால், நோய் அதிகரித்துக் கொண்டே இருந்தது. எதுவரை என்றால், ஒரு நேரத்தில் நோயாளிக்கு வாந்தி வந்தது. அது அந்த நோயின் இறுதி கட்டமாகும். அதற்குப் பிறகு, மூச்சுத் திணறியது; கழுத்து பின்பக்கம் இழுத்துக் கொண்டது; கண்கள் இருண்டு போயின; பேச்சு வரவில்லை. நான் ஓடிச் சென்று படிகளில் ஏறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் என் குரலைக் கேட்டு கதவைத் திறந்து, "நலம் தானே!" என்றார்கள். நான், 'இப்பொழுதோ நிலைமை இன்னும் இக்கட்டானதாக மாறி விட்டது' என்று பணிவுடன் கூறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் விவரங்கள் அனைத்தையும் செவியேற்ற பிறகு, "உலகத்தின் எத்தனை ஆயுதங்கள் இருந்தனவோ அவை அனைத்தையுமோ நாம் பயன்படுத்தி விட்டோம். இப்பொழுது ஓர் ஆயுதம் மட்டும் எஞ்சியுள்ளது. அது துஆவாகும். நீங்கள் செல்லுங்கள். அவளுக்கு உடல் நலம் ஆனபிறகுதான் நாம் துஆவிலிருந்து தலையைத் தூக்குவோம்" என்று கூறினார்கள்.

நான் இதைப் கேட்டு திரும்பி வந்து மனைவியிடம், 'இப்பொழுது உனக்கு என்ன கவலை! இப்பொழுதோ பெறுப்பேறபவர் தாமே பொறுப்பேற்றுக் கொண்டார்' என்று கூறினேன். அப்பொழுது இரவு 2 மணியாகியிருந்தது. நான் வீட்டுக்கு வந்தேன். நோயாளி மனைவியை அதே நிலையில் விட்டுவிட்டு இன்னொரு அறைக்குச் சென்று உறங்கி விட்டேன். காலையில் ஏதோ பாத்திர சத்தம் கேட்டு நான் கண் விழித்தேன். மனைவி நலமாகியிருப்பதைக் கண்டேன். அவள், 'நீங்களோ உறங்கிக் கொண்டிருந்தீர்கள். 2 மணி நேரத்துக்குப் பிறகு, அல்லாஹ் அருள் புரிந்து விட்டான்' என்று கூறினாள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இந்த நிகழ்வில் தோழர்களுக்கான வேதனை மற்றும் கொடை ஆகிய இரண்டின் உயர்தரம் குறித்தும் தெரியவருகிறது.

ஒருமுறை காதியானைச் சேர்ந்த ஒரு கடும் எதிரிக்குத் தன் உறவினர் ஒருவருக்காகக் கஸ்தூரி தேவைப்பட்டது. கஸ்தூரி கிடைக்காமல் இருந்தது மட்டுமின்றி, இது மிகவும் விலையுயர்ந்த பொருளாகவும் இருந்தது. அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டு கதவுக்கு வந்து, கஸ்தூரி வழங்குமாறு கேட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உடனடியாகவே அரை தோலா (5.83 கிராம்) அளவு கஸ்தூரியை அவருக்கு வழங்கி விட்டார்கள்.

ப்ளேக் நோய் பரவியபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் வஹீ மற்றும் அவன் வழங்கிய அறிவைக் கொண்டு ஒரு மருந்தை உருவாக்கத் துவங்கினார்கள். அதற்கு திர்யாக்கே இலாஹீ - இறைவனின் நச்சு நீக்கி என்று பெயரிட்டார்கள். அந்த மருந்தில் பல ஆயிரம் ரூபாய் பெறுமான விலைமதிப்பற்ற கற்கள் சேர்க்கப்பட்டன. பல விலையுயர்ந்த

மருந்துகள் சேர்க்கப்பட்டன. இந்த மருந்து உருவானதும், ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் பெருந்தன்மையுடன் இதைப் பகிர்ந்தளித்தார்கள். வெளியூரிலிருந்து கேட்டவர்களுக்குப் பதிவு அஞ்சலும், தம் சொந்த செலவில் அனுப்பி வைத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மத் சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் தமது கடிதத்தில் ஹுஸூர் (அலை) அவர்களிடம், '(என் மனைவி) கருவுற்றிப்பதன் காரணமாக வீட்டில் எத்தகைய சிரமம் இருக்கிறது என்றால், உணவு சமைக்க இயலாது. ரொட்டியோ தந்தூர் அடுப்பில் சமைத்து வாங்கிக் கொள்கிறோம். ஆனால், குழம்பு சமைப்பதில் சிரமம் இருக்கிறது' என்று பணிவுடன் கூறி, லங்கரிலிருந்து குழம்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். இதனால் ஹுஸூர் (அலை) அவர்கள், "முஃப்தீ சாஹிப் அவர்களுக்கு லங்கரிலிருந்து இரண்டு வேளை சிறந்த குழம்பு வழங்கி வாருங்கள்" என்று லங்கரின் பொறுப்பாளருக்கு வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஒருமுறை ஆய்வுக்காக ஒரு குழுவை நஸீபைன் எனும் இடத்துக்கு அனுப்பி வைப்பதாக முடிவானது. குழுவின் உறுப்பினர்களுக்கு ஆயத்தம் மேற்கொள்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தலைக்கு ஐம்பது ரூபாய் வழங்கினார்கள். பின்னர் சில காரணங்களால் இந்தக் குழு செல்ல முடியவில்லை. குழுவின் உறுப்பினர் ஒருவர் அந்த ஐம்பது ரூபாயைத் திருப்பிக் கொடுக்கப் பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், "நாம் ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து விட்டால் அதைத் திருப்பி வாங்கிக் கொள்வதில்லை" என்றார்கள்.

ஒருமுறை லங்கருக்கான செலவுத் தொகை தீர்ந்து போனபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் துணைவியாரிடமிருந்து (பொருள் வாங்க) போதுமான அளவு ஏதாவது நகையை வாங்கி, அதை விற்று பொருள் வாங்கிக் கொள்ளுமாறு கூறினார்கள். இரண்டு நாள்களுக்குப் பிறகு மீண்டும் செலவுத் தொகை தீர்ந்து போனபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், "நாம் வெளிப்படை காரணிகளைக் கொண்டு ஏற்பாடு செய்திருந்தோம். இப்பொழுது நமக்குத் தேவையில்லை. யாருடைய விருந்தினர்களோ அவன் தானே ஏற்பாடு செய்வான்" என்று கூறினார்கள்.

இதன்படி, காலை எட்டு ஒன்பது மணிக்குக் கடிதம் கொடுப்பவர் வந்தபோது, அவர் கையில் கிட்டத்தட்ட பத்து பதினைந்து Money Order கள் இருந்தன. அவை ஐம்பது ஐம்பது, நூறு நூறு ரூபாய்களைக் கொண்டிருந்தன. அவை பல்வேறு இடங்களில் இருந்து வந்திருந்தன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த Money Order களைப் பெற்றுக் கொண்டு தவக்குல் - இறைநம்பிக்கை என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

ஒருமுறை கடுமையாக பஞ்சம் நிலவியபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், "லங்கரில் எந்நேரமும் மாவு சமைக்கப்பட்டு, ரொட்டி ஆயத்தமாக

இருக்க வேண்டும். ரொட்டி கேட்பவருக்கு ரொட்டி வழங்கப்பட வேண்டும். எவரும் வெறுங்கையோடு செல்லக்கூடாது" என்று கூறினார்கள்.

ஷேக் ஹாமித் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: வாழ்நாளின் இறுதி வரை ஹுஸூர் (அலை) அவர்கள் என்னிடம் ஒருபோதும் கணக்கும் கேட்டதில்லை; கோபித்துக் கொண்டதுமில்லை.

ஹஸ்ரத் ஷேக் அஹ்மத் தீன் சாஹிப் (ரலி) அவர்களை ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏதோ ஒரு வேலையாக அனுப்பி வைத்து, "அடுத்த நாள் விரைவாக வந்து விடுங்கள்" என்று வழிகாட்டலும் வழங்கியிருந்தார்கள். அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அடுத்த நாள் தாமதமாக சென்றடைந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் என்னைப் பற்றிய கவலையில் ஒரு ஆளை அனுப்பி வைத்திருந்தார்கள். நான் ஹுஸூர் (அலை) அவர்களின் மேலான அவையை அடைந்ததுமே, எல்லாவற்றிற்கும் முதலாக ஹுஸூர் (அலை) அவர்கள், "உங்களுக்குத் துன்பம் ஏதும் நேரவில்லையே?" என்று கேட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் நலம் விசாரித்ததனால், எனது உள்ளம் பூரிப்படைந்தது. நான் கணக்கு கொடுக்கப் பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், "எமக்கும் உங்களுக்கும் இடையே கணக்கு என்ன! இந்தப் பணத்தை நீங்கள் உங்கள் தேவைக்கு செலவு செய்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹகீம் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து சிறிது கடன் வாங்கினார்கள். அவர்கள் அந்தக் கடன் பணத்தைத் திருப்பி அனுப்பிய போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதை விரும்பவில்லை. மேலும், "தாங்கள் எமது பணத்தை உமது பணத்திலிருந்து வேறானதாகக் கருதுகிறீர்களா?" என்றார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்டதற்கான அறிவிப்பை செய்ததிலிருந்து, இறைவன் அன்னாருக்கு, 'அரசர்கள் உம்முடைய ஆடைகளிலிருந்து அருளைத் தேடுவார்கள்' என்று நற்செய்தி வழங்கியுள்ளான் என்பதும் மக்களுக்குத் தெரியவந்ததிலிருந்து, மக்கள் பொதுவாக அன்னாரிடம் ஆடைகளைக் கேட்டுக் கொள்வார்கள். அன்னார் ஒருபோதும் எவருக்கும் மறுக்க மாட்டார்கள். சிலவேளை நிலைமை எப்படி ஆகி விடும் என்றால், அன்னாரது உடலில் மட்டுமே ஆடைகள் எஞ்சியிருக்கும். மற்றவை அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும்.

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்லத்தில் ஓர் ஏழை பெண் சிறிது அரிசி திருடி விட்டாள். மக்கள் அவளைப் பார்த்து விட்டார்கள்; கூச்சல் ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை)

அவர்கள் அப்பொழுது தமது அறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு வெளியே வருகை தந்தார்கள். அப்பொழுது இந்தக் காட்சியைக் கண்டார்கள்: மோசமான நிலையில் இருந்த ஓர் ஏழை பெண் நின்று கொண்டிருக்கிறாள். அவள் கையில் கொஞ்சமாக அரிசி இருக்கின்ற மூட்டை இருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு நிகழ்வைப் பற்றித் தெரியவந்தது. அந்த ஏழைப் பெண்ணின் தோற்றத்தைக் கண்டதும் அன்னாரது உள்ளம் உருகி விட்டது. அன்னார், "இவள் பட்டினியாகவும், பரம ஏழையாகவும் தெரிகிறாள். இவளுக்கு சிறிது அரிசி கொடுத்து அனுப்பி விடுங்கள் - அதாவது, இன்னும் கொஞ்சம் கொடுங்கள் - மேலும், இறைவனின் திரையிடுதல் எனும் பண்பைக் கடைபிடித்திடுங்கள்" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வை எடுத்துரைத்து விட்டு எழுதுகிறார்கள்: இந்த நிகழ்வைக் கேட்டு அவசரக்காரர் ஒருவர், 'இதுவோ திருட்டில் துணிச்சலை உருவாக்கக்கூடியதாகும்; அல்லது ஒருத்தி திருடியாக இருக்கிறாள். அன்னார் அவளைத் துணிச்சல் கொள்ள வைக்கிறார்களே' என்று கூறலாம். ஆனால், அறிவார்ந்தவர்கள் புரிகிறார்கள்; அறிவுடையவர் புரிகிறார். அதாவது, பொருள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. எடுத்த பெண்ணோ பசி, பட்டினியால் இறந்து கொண்டிருந்த பரம ஏழை பெண் ஆவாள். ஆக, இது திருட்டை ஆதரிப்பதாகாது; மாறாக, உண்மையில், மிஸ்கீன்களுக்கு வழங்குவதைச் சேர்ந்ததாகும்.

ஹதீஸ்களில் இருந்து நிரூபணமாகிறது, அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களும் இது போன்ற நிலைமைகளில், திருடும் மனிதன் மிகவும் வறியவனாக இருக்கும்போது, பசியின் உச்சத்தில் இருக்கும்போது, ஏதாவது உணவுப் பொருளை எடுத்து விட்டால், அவனைத் திருடன் திருடன் என்று கூறியதில்லை. மாறாக, கண்டுகாணமல் இருந்திருக்கிறார்கள். இவைதான் தம் எஜமானருக்கு முழுமையாகக் கட்டுப்படுவதற்கான முன்மாதிரிகள் ஆகும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى عَبْدِكَ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ وَبَارِكْ وَسَلِّمْ۔

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ

لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**